திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் செவ்வாய்க்கிழமை நாள் 26.07.2022 காலை 11.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி சாதாரணக் கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

பொருள்: 1

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், கீழ்கண்ட நிதியுதவி 2021–22ன் கீழ் பணியினை மேற்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 10.06.2022 அன்று கோரியதில், (ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .67/2022–23) வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	வேலையின் விபரம்	வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) ஒப்பந்த சதவீதம்	குறிப்பு
1	2	3	4
	மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் / திருச்சிராப்பள்ளி (மேற்கு) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2021–22		
1	புதிய வார்டு எண் 53 (பழைய வார்டு எண் 44) மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் புதிதாக நவீன கழிப்பிடம் மற்றும் குளியலறை வசதிகளுடன் கூடிய கட்டிடம் கட்டுதல் இ3/ 8399 /2022 (மையம்) மதிப்பீடு ரூ.51.00 லட்சம்	**அன்னை பிரமோட்டர்ஸ், திருச்சி** 0 .05% குறைவு **ஜி.வெங்கடேஷ், திருச்சி** 1.80% அதிகம்	பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். அன்னை பிரமோட்டர்ஸ், திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான விலை வீதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்து உள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு 1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்

இ3/ 8399 /2022 (மையம்)

தீர்மானம் எண்: 110, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:2

அரசாணை எண்.254, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.5) துறை, நாள். 15.10.1997இல் வார்டு அலுவலகங்களுக்கு ஒரு வழக்குரைஞர் வீதம் நான்கு வார்டு அலுவலகங்களுக்கும் 4 வழக்குரைஞர்களும், மைய அலுவலகத்திற்கு 2 வழக்குரைஞர்களும் ஆக கூடுதல் 6 வழக்குரைஞர்களை நியமனம் செய்து கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகள் மற்றும் மாநகராட்சியால் தொடரப்படும் வழக்குகள் மற்றும் மேல்முறையீடு வழக்குகள் ஆகியவைகளை திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்தில் எதிர் வழக்காட தங்களை மாநகராட்சி வழக்குரைஞர்களாக நியமனம் செய்ய கோரி கீழ்கண்ட வழக்குரைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

1. திருமதி.லதாராமதாஸ், வழக்குரைஞர்,
2. திரு.சு.வித்யா சங்கர், வழக்குரைஞர்,

மேற்கண்ட வரிசை எண். 1 இல் கண்டுள்ள திருமதி.லதாராமதாஸ், வழக்குரைஞர் என்பவரை தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண்.607, நாள்.11.11.2021 இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 4777/2021/சி1(மை), நாள்.13.11.2021ன் வாயிலாக மாநகராட்சி வழக்குரைஞராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது.

மேலும் வரிசை எண்.2 இல் கண்டுள்ள திரு.சு.வித்யாசங்கர், வழக்குரைஞர் என்பவரை தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண்.679, நாள்.23.12.2021 இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 4777/2021/சி1(மை), நாள். 23.12.2021ன் வாயிலாக மாநகராட்சி வழக்குரைஞராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது.

மேற்கண்ட 2 வழக்குரைஞர்களை மாநகராட்சி வழக்குரைஞர்களாக நியமனம் செய்ததனை தொடர்ந்து கீழ்கண்ட வழக்குரைஞர்கள் தங்களை மாநகராட்சி வழக்குரைஞர்களாக நியமனம் செய்ய கோரி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

1. திரு.த.ராமமூர்த்தி, வழக்குரைஞர்
2. திரு.மு.மீராமொய்தீன், வழக்குரைஞர்
3. திரு.ஜெ.சுரேஷ்பாபு, வழக்குரைஞர்
4. திரு.பா.ஆரோக்கியராஜ், வழக்குரைஞர்
5. திரு.ஜி.எம்.செல்லத்துரை, வழக்குரைஞர்
6. திரு.என்.காமராஜ், வழக்குரைஞர்
7. திருமதி.நி.செகனாஸ் பேகம், வழக்குரைஞர்

தற்பொழுது திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நான்கு கோட்ட அலுவலகங்களாக இயங்கி வந்த நிலையில் அரசாணை (நிலை) எண். 126 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.12.2021 இல் 5 வார்டு அலுவலகங்களாக பிரித்து ஆணையிடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தற்பொழுது கூடுதலாக ஒரு வார்டு அலுவலகம் செயல்பட உள்ளதாலும், பணியாளர்கள் தொடர்பான வழக்குகள் மற்றும் மாநகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளை உடனுக்குடன் நிலுவையின்றி முடிவுகள் எடுக்க ஏதுவாக ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ள 2 வழக்குரைஞர்களுடன் மேலும், மேற்கண்ட 7 வழக்குரைஞர்களை தனி அலுவலர் அவர்கள் தீர்மானம் எண்.1, நாள்.03.01.2022ல் மாநகராட்சி வழக்குரைஞர்களாக நியமனம் செய்வது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.4777 / 2021 / சி1 (மையம்), நாள்.03.01.2022ன் வாயிலாக மாநகராட்சி வழக்குரைஞராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில், திரு.எம்.லிங்கராஜன் என்பவர் மாநகராட்சி வழக்குரைஞராக நியமனம் செய்ய கோரி விண்ணப்பம் அளித்துள்ளார்.

எனவே, மாநகராட்சியில் ஏற்கனவே 9 வழக்குரைஞர்கள் நியமனம் செய்யப்பட்டதனை தொடர்ந்து, கூடுதலாக மேற்கண்ட திரு.எம்.லிங்கராஜன் என்பவரை மாநகராட்சி வழக்குரைஞராக நியமனம் செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. ஏற்கனவே உள்ள 09 வழக்குரைஞர்களுடன் மேலும் ஒருவரை வழக்குரைஞராக நியமனம் செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ள 9 வழக்குரைஞர்களுடன் தற்பொழுது நியமனம் செய்யப்படும் 1 வழக்குரைஞரின் பதவிக்காலம் நியமனம் செய்யப்படும் நாள் முதல் 03 ஆண்டுகள் என நிர்ணயம் செய்யவும், அதன் பின்னர் அவர்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து மாமன்ற ஒப்புதலுடன் தொடர்ந்து நியமன காலத்தினை நீட்டித்தோ அல்லது புதிதாக வழக்குரைஞர்களை 03 ஆண்டுகளுக்கு பின்னர் தேர்வு செய்யவோ ஒப்புதல் வழங்கலாம்.
3. புதிதாக நியமனம் செய்யப்படும் வழக்குரைஞருக்கு மாமன்ற தீர்மானம் எண்.74, நாள். 27.06.2014ன் படி இம்மாநகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்ட வழக்குரைஞர் கட்டணத்தை ஆரம்ப நிலையில் 50%, வழக்கு முடிவுற்ற பின்னர் மீதம் 50% வழங்க ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 4777 / 2021 / சி1(மையம்)

தீர்மானம் எண்: 111, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள்:3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம் 4, வார்டு எண்.54க்குட்பட்ட ராயல் சாலையில் உள்ள மாநகராட்சி பூங்கா, மாநகராட்சியினால் தற்போது பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. இப்பூங்காவினை பராமரிக்க ஆண்டு தோறும் ரூ.6.55 இலட்சம் செலவினம் ஆகிறது. எனவே இச்செலவினத்தை ஏற்கனவே இப்பூங்காவினை சுற்றியுள்ள சுற்றுச்சுவர் மீது பூங்கா தெரியும் வண்ணம் சீரான இடைவெளியில் விளம்பர பலகை (ஒரு விளம்பரத்திற்கும் மறு விளம்பரத்திற்கும் சுமார் 15 அடி இடைவெளியில்) வைத்து தனியார் மூலம் விளம்பரம் செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் மேற்படி பூங்காவினை பராமரிக்க விருப்புணர்வு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

விருப்புணர்வு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி அளிக்கலாம்.

இ7/7893 /2022 (மையம்)

தீர்மானம் எண்: 112, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:4

திருச்சிராப்பள்ளி மாநகரட்சி பணிவிதிகள் 1996 அமுல்படுத்தப்பட்டதனை தொடர்ந்து அரசு ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 08.05.1998இல் பணியிட அளவு கோல் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டதில் நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் நிலைகளில் கீழ்கண்ட விவரப்படியான பணியிடங்களை இம்மாநகராட்சிக்கு அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

1. கணக்கு அலுவலர் – 2 பணியிடங்கள்.
2. நிர்வாக அலுவலர் – 4 பணியிடங்கள்.

நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் நிலையிலான பணியிடங்கள் வகுப்பு – II ஐ சார்ந்த பணியிடங்கள் என்பதால், மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 106 (B)ன்படி, வகுப்பு – II நிலையிலான பணியிடங்கள் யாவும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று நியமனம் செய்தல் வேண்டும் எனவும், அவ்வாறான நியமனத்திற்கு அரசின் உறுதியாக்க ஆணையினை பெறுதல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சிப் பணிவிதிகள் 1996ல் கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு அரசு ஆணை எண். 179ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.05.10.2009 இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு தகுதிகள் மற்றும் நியமன முறை வரையறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

வ. எண்	பணியிடத்தின் பெயர்	ஏற்கனவே பணிவிதிகளில் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ள தகுதிகள் மற்றும் நியமன முறை	பணிவிதிகளுக்கு வெளியிடப்பட்டுள்ள திருத்தம்
1	கணக்கு அலுவலர்	1. கண்காணிப்பாளர் நிலையில் உள்ளவர்களை பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்தல் 2. வகுப்பு – II நிலையில் உள்ளவர்களை பணிமாறுதல் மூலம் பூர்த்தி செய்தல் 3. கண்காணிப்பாளர் நிலையில் கணக்குப் பிரிவில் 2 ஆண்டுகள் மற்றும் கணக்கராக 2 ஆண்டுகள் பணிபுரிந்திருத்தல் வேண்டும்.	1. கணக்கு அலுவலர் நிலையிலான பணியிடத்தினை கண்கா ணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் பொதுவான பணித்தேர்ச்சி பெயர் பட்டியலில் இருந்து பூர்த்தி செய்தல் 2. கண்காணிப்பாளர் அல்லது உதவி வருவாய் அலுவலராக இரண்டு ஆண்டுகளுக்கு குறையாமல் பணி புரிந்திருத்தல் வேண்டும்.
2	நிர்வாக அலுவலர்	1. வகுப்பு – II நிலையில் உள்ளவர்களை பணிமாறுதல் மூலம் பூர்த்தி செய்தல் 2. கணக்கு அலுவலராக இரண்டு ஆண்டுகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்	1. கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் நிலைகளில் பணிபுரிந்து வருபவர்களை பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்தல். 2. கணக்கு அலுவலர் நிலையிலான பணியிடத்தினை கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் நிலையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் பொதுவான பணித்தேர்ச்சி பெயர்ப்பட்டியலிலிருந்து பூர்த்தி செய்தல். 3. கண்காணிப்பாளர் அல்லது உதவி வருவாய் அலுவலராக இரண்டு ஆண்டுகளுக்கு குறையாமல் பணிபுரிந்து இருத்தல் வேண்டும்.

மாநகராட்சி பணி விதிகளின்படி, ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் முதல் நாள் தகுதி நாளாக கொண்டு காலிப்பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பதன் அடிப்படையில் 2022 – 2023ம் ஆண்டிற்கு 01.04.2022 அன்று தகுதி நாளாக கொண்டு நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பணியிடங்களில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் மற்றும் ஏற்படவுள்ள உத்தேச காலிப்பணியிட மதிப்பீடு அறிக்கை தயார் செய்ததில், 5 காலிப்பணியிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதில் முதற்கட்டமாக, நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் நிலையில் கீழ்கண்டவாறு 2 காலிப்பணியிடம் உள்ளது.

1. நிர்வாக அலுவலர் நிலையில் பணிபுரிந்து வந்த திரு .என்.இராசமாணிக்கம் என்பவர் பணியிடையில் 09.12.2021 அன்று மரணம் அடைந்து விட்டதால் நிர்வாக அலுவலர் நிலையில் 1 காலிப்பணியிடம் ஏற்பட்டுள்ளது.
2. திருமதி.ஆ.ரஷீதாபேகம், கண்காணிப்பாளர் என்பவருக்கு இவ்வலுவலக செயல்முறை ந.க.எண். 4692 / 2021 / சி1(மை), நாள். 24.11.2021 ன் வாயிலாக கணக்கு அலுவலர் ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டு இவ்வலுவலக கடிதம் ந .க.எண்.4692 / 2021 / சி1(மை), நாள்.07.04.2022ன் வாயிலாக அரசின் உறுதியாக்கத்திற்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதனை தொடர்ந்து மேற்படி கணக்கு அலுவலர் 31.05.2022இல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றதால் கணக்கு அலுவலர் நிலையில் 1 காலிப்பணியிடம் ஏற்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் மற்றும் ஏற்படவுள்ள உத்தேச காலிப்பணியிட மதிப்பீடு அறிக்கையின்படி, 5 காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்வது குறித்து கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் நிலையில் பணிபுரிந்து வருபவர்களுக்கு பணிமூப்பு பெயர் பட்டியல் (Seniority List) இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.4645 / 2022 / சி1(மை), நாள். 26.04.2022 ன் வாயிலாக கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் நிலையில் பணிமூப்பின் படி காத்திருப்போர் அட்டவணை

வ. எண்	பணியாளர் பெயர் திருவாளர்கள்	இன்றைய நாளில் வகித்து வரும் பதவி	கண்காணிப்பாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள்	கண்காணிப்பாளர் நிலையில் 2 ஆண்டுகள் நிறைவு செய்யும் நாள்.
1	ஆர்.புவனேஷ்வரி	கண்காணிப்பாளர்	14.03.2018	13.03.2020
2	எஸ்.வசந்தி	கண்காணிப்பாளர்	14.03.2018	13.03.2020
3	பி.சிவசங்கர்	உதவி வருவாய் அலுவலர்	14.03.2018	13.03.2020
4	எஸ்.துரை	உதவி வருவாய் அலுவலர்	14.03.2018	13.03.2020
5	து.ஹேமலதா	கண்காணிப்பாளர்	02.07.2019	01.07.2021
6	வி.செந்தில்வடிவு	கண்காணிப்பாளர்	02.07.2019	01.07.2021
7	ஜி.புனிதவதி	கண்காணிப்பாளர்	19.08.2021	17.08.2023
8	பா.வேலன்	கண்காணிப்பாளர்	19.08.2021	17.08.2023

இதனை தொடர்ந்து, நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் நிலையிலான பணியிடத்திற்கு தகுதியான பணியாளர்களின் இறுதி பணிதேர்ச்சி பெயர் பட்டியல் ஆணையர், அவர்களின் செயல்முறை ந.க.எண்.4645/2022/சி1(மை), நாள். 31.05.2022ன் வாயிலாக கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

வ. எண்	பணியாளர் பெயர் திருவாளர்கள்	இன்றைய நாளில் வகித்து வரும் பதவி	கண்காணிப்பாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள்	கண்காணிப்பாளர் நிலையில் 2 ஆண்டுகள் நிறைவு செய்யும் நாள்.
1	ஆர்.புவனேஷ்வரி	கண்காணிப்பாளர்	14.03.2018	13.03.2020
2	எஸ்.வசந்தி	கண்காணிப்பாளர்	14.03.2018	13.03.2020
3	பி.சிவசங்கர்	உதவி வருவாய் அலுவலர்	14.03.2018	13.03.2020
4	எஸ்.துரை	உதவி வருவாய் அலுவலர்	14.03.2018	13.03.2020
5	து.ஹேமலதா	கண்காணிப்பாளர்	02.07.2019	01.07.2021
6	வி.செந்தில்வடிவு	கண்காணிப்பாளர்	02.07.2019	01.07.2021

இந்நிலையில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கான உத்தேச காலிப்பணியிட மதிப்பீட்டு அறிக்கையின் முதற்கட்டமாக தற்போது காலி ஏற்பட்டுள்ள 2 பணியிடங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

இதனை தொடர்ந்து இறுதி பணித்தேர்ச்சி பெயர்பட்டியல் வெளியிடப்பட்டதன் அடிப்படையில் கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர் பணியிடத்தில் ஏற்பட்டுள்ள 2 காலிப்பணியிடங்களை தற்காலிகமாக பணியமர்த்தலாம்.

வ. எண்	பணியாளர் பெயர் (திருமதிகள்)	பணியிடத்தின் பெயர்	காலிப்பணியிடம் ஏற்பட்டுள்ள விவரம்
1	2	3	4
1	ஆர்.புவனேஸ்வரி	கண்காணிப்பாளர்	நிர்வாக அலுவலர் நிலையில் பணிபுரிந்து வந்த திரு.என்.இராசமாணிக்கம் என்பவர் பணியிடையில் 09.12.2021 அன்று மரணம் அடைந்து விட்டதால் நிர்வாக அலுவலர் நிலையில் ஏற்பட்டுள்ள 1 காலிப்பணியிடம்
2	எஸ்.வசந்தி	கண்காணிப்பாளர்	திருமதி.ஆ.ரஷீதாபேகம், கணக்கு அலுவலர் என்பவர் 31.05.2022 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றதால் ஏற்பட்டுள்ள 1 காலிப்பணியிடம் (அரசின் உறுதியாக்கம் எதிர்நோக்கப்படுகிறது)

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள கண்காணிப்பாளர்களை நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் ஆக பதவி உயர்வு செய்து கொள்ளவும், அதற்கான அரசின் உறுதியாக்க ஆணையினை பெற உரிய கருத்துக்கள் அரசுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக அனுப்பி வைக்கலாம் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள திருமதி.ஆர்.புவனேஸ்வரி, கண்காணிப்பாளர் என்பவரை நிர்வாக அலுவலராகவும், திருமதி. எஸ்.வசந்தி, கண்காணிப்பாளர் என்பவரை கணக்கு அலுவலராகவும், மாமன்றத்தின் ஒப்புதலுடன் பதவி உயர்வு செய்திடவும், இதற்கான அரசின் உறுதியாக்க அரசாணையினை பெற ஏதுவாக உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கவும், ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 4645 / 2022 / சி1(மை)

தீர்மானம் எண்: 113, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள்:5

இம்மாநகராட்சியில், மைய அலுவலக நிர்வாகப்பிரிவில் சி6 இருக்கையில் இளநிலை உதவியாளர் நிலையில் பணிபுரிந்து வரும் திரு.ஆர்.கார்த்திக் என்பவர் 05.07.2021 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருவதாகவும், தன்னுடைய மனைவி மற்றும் தனது இரு குழந்தைகள் மற்றும் வயதான அவருடைய பெற்றோருடன் தூத்துக்குடியில் வசித்து வருவதாகவும், தனது மனைவியின் தந்தை தூத்துக்குடியிலுள்ள மத்திய வரி மற்றும் சுங்கத்துறையில் Head Havildar–ராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னுடைய மனைவி அவருடைய பெற்றோருக்கு ஒரே பெண் குழந்தையாவார் என்றும், தனது மனைவியின் தந்தை இருதய நோயாலும், தாயார் நீரிழிவு நோயாலும் பாதிக்கப்பட்டு இந்நாள் வரை சிகிச்சை பெற்று வருவதாக தெரிவித்துள்ளார்.

தனது தாயாரும், சகோதரியும் தனது தம்பியுடன் சென்னை ஆவடியில் வசித்து வருவதாகவும், தான் மட்டும் திருச்சியில் தனியாக வாடகை வீட்டில் வசித்து வருவதால், தனது மனைவி அவரது பெற்றோரை கவனித்து வருவதால், தன்னுடைய இரு பெண் குழந்தைகளும் தூத்துக்குடியில் உள்ள தனியார் பள்ளியில் பயின்று வருவதாகவும், அவர்களால் திருச்சிக்கு வர இயலவில்லை என்பதால், தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் வழங்குமாறு கோரியுள்ளார்.

மேற்படி பணியாளர் குடும்ப சூழ்நிலை காரணமாக, தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் கோரிய கோரிக்கையின் மீது உரிய தீர்மானம் நிறைவேற்றி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, அவர்களுக்கு அனுப்பி வைப்பது குறித்து பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

தனியரின் குடும்ப சூழ்நிலை கருத்தில் கொண்டு ஒ ரு வழி பணிமாறுதல் அடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு பணிமாறுதலில் செல்ல தீர்மானம் நிறைவேற்றி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்க ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 8491 / 2022 / சி1(மை)

தீர்மானம் எண்: 114, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

பொருள்: 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு எண் IIற்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் அரசுக்கு சொந்தமான துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல் நிலைப்பள்ளிகள் நிலையில் 23 பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள 25 தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் அப்பள்ளியின் தலைமை ஆசிரியரின் கட்டுப்பாட்டின் கீழ் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேற்கண்ட தூய்மைப் பணியாளர்களுக்கு ஊதியம் கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ எண்	பணியாளர் களின் எண்ணிக்கை	மொத்த பணி நாட்கள்	மொத்த மனித வேலை நாட்கள் (2 x 3)	நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ஊதியம்	01.04.2022 முதல் 31.03.2023 வரை ஓர் ஆண்டிற்கான ஊதியம் (4 x 5)	தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) 13% (6 x 13%)	ESI 3.25%	மொத்தம் (6 + 7)
1	2	3	4	5	6	7	8	9
1	25 பணியாளர்கள்	365 நாட்கள்	9125 நாட்கள்	ரூ.360/–	ரூ.32,85,000/–	ரூ.4,27,050/–	ரூ.1,06,763/–	ரூ.38,18,813/–

பள்ளி மாணவர்களின் சுகாதாரம் கருதியும், பள்ளி வளாக தூய்மை கருதியும் மேற்கண்ட தூய்மைப் பணியாளர்களின் பணிக்காலத்தினை 01.04.2022 முதல் 31.03.2023 வரை நீடிப்பு செய்யவும், மேற்கண்ட காலத்திற்கு இப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய செலவினம் ரூ.38,18,813/-க்கு அனுமதி வழங்க கோரியும் மாமன்ற அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட பணியினை 01.04.2022 முதல் 31.03.2023 வரை நீடிப்பு செய்ய அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ .38,18,813/-க்கு அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை கல்வி நிதி 2101010 என்ற தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ . 50.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க எண் எச்1/1978/2022(அரிய)

தீர்மானம் எண்: 115, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

பொருள் :7

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி SBM 2.O திட்டத்தின் கீழ் , கீழ் கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 122/2022-23ன் வாயிலாக 30.04.2022 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள் ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

வ. எண்	வேலையின் விவரம்	வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம்	குறிப்பு
1	வார்டு எண்.25க்குட்பட்ட லாவன்யா கார்டன் பகுதியில் புதிதாக பொதுக் கழிப்பிடம் கட்டும் பணி (14 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ.35.00 இலட்சம் இ7/9021/2022 (மையம்)	1. திரு. P. அங்கமுத்து 0.05% குறைவு 2.திரு. S. பெரியசாமி 0.31 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு. P. அங்கமுத்து ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு: -

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணியினை பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

இ7/9021/2022(மையம்)

தீர்மானம் எண்: 116, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்:8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அனைத்து மண்டலங்களிலும் வரியில்லா இனங்கள் (Non Tax) அரசாணையின் வழிகாட்டுதலின்படி வரியில்லாயினங்களான பெட்டிக்கடை, கட்டிடக்கடை மற்றும் நிலவாடகை ஆகிய இனங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாதவாடகை 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டும் ஒன்பது ஆண்டுக்கு ஒருமுறை குத்தகை வாடகை மறு நிர்ணயம் செய்யப்படவேண்டும். குத்தகை கால அளவை நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மூன்றாண்டுக்கு ஒருமுறை கீழ்கண்ட விபரப்படி குத்தகையை புதுப்பிக்க உரிய படிவத்தில் பூர்த்தி செய்து கட்டணம் செலுத்தி புதுப்பித்து மாதவாடகை செலுத்தப்படவேண்டும்.

1 > 100 ச.அடி ரூ.500/
2 100 – 500 ச.அடி ரூ.1000/–
3 500–1000 ச.அடி ரூ.1500/–
4 >1000 ச.அடி ரூ.2000/–

மார்ச் 31.03.2022 அன்று மூன்றாண்டு நிறைவடைவதால் 01.04.2022 முதல் புதுப்பிக்கப்படவேண்டும். மார்ச் 31 உடன் ஆண்டு முடிவுற்ற உடன் 2022–2023 ஆண்டு பராமரிப்பு பணி நடைபெற்றதாலும் மற்றும் படிவங்கள் மூன்றாண்டு குத்தகைதாரர்களிடம் உரிய படிவம்பெற்று பூர்த்தி செய்து புதுப்பிப்பு கட்டணம் செலுத்த காலதாமதம் ஆகியதாலும் ஏப்ரல், மே மற்றும் ஜீன் ஆகிய மூன்று மாதத்திற்கு அபராத கட்டணம் கணினியில் உருவாக்கப்பட்டுள்ளது எனவே 01.04.2022 முதல் 30.06.2022க்குட்பட்ட காலத்திற்கு உள்ள அபராத கட்டணம் கணினியில் நீக்கம் செய்து தருமாறு வியாபாரசங்கங்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றது.

மேலும் பல குத்தகைதாரர்கள் குத்தகையை புதுப்பித்த அபராத கட்டணங்கள் உடன் வாடகை செலுத்திவருகிறார்கள் என்ற விபரம் சமர்ப்பித்து கொள்ளப்படுகிறது. குத்தகை இனங்களான பெட்டிகடை, நிலவாடகை, கட்டிடக்கடைதாரர்களுக்கு ஏப்ரல் 2022, மே 2022 மற்றும் ஜீன் 2022 ஆகிய மூன்று மாதங்கள் மட்டும் மாதவாடகையில் அபராததொகையை நீக்கம் செய்வது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. பல குத்தகைதாரர்கள் குத்தகையை புதுப்பித்து அபராத கட்டணம் மற்றும் மாத வாடகையை செலுத்தி வருகிறார்கள் இருப்பினும் சில வியா பாரிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.
2. 5 மண்டங்களிலும் 2022 குத்தகை ஏப்ரல் 2022, மே 2022, மற்றும் ஜீன் 2022 ஆகிய மூன்று மாதங்கள் அபராத தொகையை நீக்கம் செய்ய பரிசீலிக்கலாம்.

அ1/4438/2015(மையம்)

தீர்மானம் எண்: 117, 5 மண்டலங்களிலும் 2022 குத்தகை ஏப்ரல் 2022, மே 2022, மற்றும் ஜீன் 2022 ஆகிய மூன்று மாதங்கள் அபராத தொகையை நீக்கம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டத்திற்குட்பட்ட 2022-2025ம் மூன்றாண்டுகால குத்தகை இனம் 8 குத்தகை இனங்களில் ஒரு குத்தகை இனம் 30.06.2022 அன்று மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது . கீழ்கண்ட விபரப்படி மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு :-

வ. எண்.	வருடம்	தொகை ரூ.	மூன்றாண்டு சராசரித் தொகை ரூ	பெயர் மற்றும் முகவரி	ஏல கேள்வித் தொகை ரூ.	ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	2	3	4	5	6	7
	குத்தகை இனம் எண்.1 - "ஏ.எஸ்.ஜி.னூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் வெளியூர் மற்றும் உள்ளூர் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்					
1	2019 - 2020	6630888	6967959	1	வெங்கடேசன் மற்றும் சீனிவாசன் 148, கல்யாண சுந்தரம் நகர், திருச்சி - 07	மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.	மறு ஒப்பந்தப் புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.
	2020 - 2021	6962433					
	2021 - 2022	7310555					

இனம் (1)க்கு 24.03.2022ந் தேதி நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளாத காரணத்தால் மறுஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என அறிவிக்கப்பட்டது.

இனம் (1)க்கு 31.03.2022ந் தேதி நடைபெற்ற இரண்டாவது மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளாத காரணத்தால் துறை மூலம் வசூல் பணி மேற்கொண்டால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதனை தவிர்க்கும் பொருட்டு ஏற்கனவே 2019 -2022 காலத்திற்கு முடிய உள்ள குத்தகை உரிமைதாரர் 2019-2020 ஆண்டிற்கான குத்தகை தொகையில் ரூ. 66,30,888/-ல் விகிதாச்சாரப்படி மூன்று மாதத்திற்கு உண்டான தொகை ரூ. 16,57,722/- ல் 01.04.2022 முதல் 30.06.2022 வரை ரூ. 16,50,0000/- ஐ வரைவோலை மூலமாக செலுத்தியுள்ளார் . மீதமுள்ள தொகை ரூ. 7,722/-ஐ ரொக்கமாக செலுத்திவிட்ட படியால் 01.04.2022 முதல் 30.06.2022 முடிய உள்ள 3 மாத காலத்திற்கு திரு.வெங்கடேசன் மற்றும் சீனிவாசன் , ஆகியோருக்கு குத்தகையினை மூன்று மாதத்திற்கு மட்டும் உரிமம் நீட்டிப்பு செய்து ஒப்படைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மூன்றாவது முறையாக 13.04.2022, நான்காவது முறையாக 18.05.2022 மற்றும் ஐந்தாவது முறையாக 30.06.20222ந் தேதி நடைபெற்ற மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளாத காரணத்தால் துறை மூலம் வசூல் பணி மேற்கொண்டால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதனை தவிர்க்கும் பொருட்டும் , நிர்வாக நலன் கருதியும் முந்தைய குத்தகைதாரர் திரு.கே.வெங்கடேசன் மற்றும் வி.சீனிவாசன் அவர்களை அலுவலக ரீதியாக அழைத்து கலந்து ஆலோசனை செய்யப்பட்டதனை அடுத்து மீண்டும் தனக்கே 01.07.2022 முதல் 30.9.2022 வரை குத்தகையை நீட்டிப்பு செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே மேற்கண்ட நபருக்கே 3 மாத குத்தகைத் தொகை ரூ.16,57,772/-ஐ வசூலித்து 01.07.2022 முதல் 30.09.2022 வரை நீட்டிப்பு செய்து ஒப்படைக்கவும், 01.10.2022 முதல் மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அவசர அவசியம் கருதி குத்தகையினை ஒப்படைத்தமைக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு :-

மேற்கண்ட பட்டியலில் 2022-2025 மூன்றாண்டுகால குத்தகை உரிம இனத்திற்கு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கோரப்படாத நிலையில் வருவாய் இழப்பினை தவிர்க்கும் வகையில் மேற்கண்ட குத்தகைதாரருக்கே 01.07.2022 முதல் 30.09.2022 வரை நீடிப்பு செய்து ஒப்படைத்தமைக்கு பின்னேற்பு வழங்கலாம். 01.10.2022ல் முதல் ஒப்படைக்க மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

கோப்பு எண். அ1/2479/2022 (பொன்)

தீர்மானம் எண்: 118, அலுவலகக் குறிப்பினை ஏற்று பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்:10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள பணிகளை திரு.R.ஜேக்கப், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு பிடித்தம் செய்யப்பட்ட காப்புத் தொகை மற்றும் வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. கீழ்க்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை இம்மாநகராட்சி வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	பணியின் விபரம்	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள்	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்)	காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண் மற்றும் வரிசை எண்.		
				தொகுப்பு	**ப.எண்.**	**வ.எண்.**
1	ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.6க்குட்பட்ட திருவளர்ச்சோலை கீழத்தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மையங்களில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் இ7/8031/2013(மையம்)	01.10.2014 (SD) 4%	8875	VII	28	378
2	ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்4க்குட்பட்ட சம்பா வாய்க்கால் தூர் வாரும் பணி இ7/9770/2013(மையம்)	30.05.2014 (SD) 4%	6884	VII	12	140
3	அரியமங்கலம் கோட்டம் வார்டு எண்22,23 மற்றும் 24 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழபடையாச்சி தெரு ஹீபர் ரோடு மற்றும் உடையான் தோட்டம் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் பதித்தல் மற்றும் விநியோக குழாய் இடைவெளிகளை இணைத்து குடிநீர் மண்டலமாக பிரிக்கும் பணி இ7/5024/2015(மையம்)	EMD Hdfc bank 004975 /21.7.15	15,000	VIII	23	61
		28.04.16	14876	IX	66	879
		31.01.2017 (SD) 4%	11,555	IX	74	980
	மொத்தம்		**57,190**			

எனவே, பட்டியலில் கண்டுள்ள இப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை மற்றும் வைப்புத் தொகை ரூ. **57,190**/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.R.ஜேக்கப், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ரூ.57190/-ஐ ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

இ7/ 2193 /2021(மையம்)

தீர்மானம் எண்: 119, பொருள்: 10 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்: 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதியின் கீழ் ஒப்பந்தபணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்குஇறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்துவிட்டது. எனவே,மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஆகியவைகளை திரும்ப வழங்குமாறு திரு. S. கோவிந்தராஜ் ஒப்பந்ததாரர் திருச்சி அவர்கள் கோரியுள்ளார்.

திரு.S. கோவிந்தராஜ், திருச்சி ஒப்பந்ததாரர் செலுத்திய முன் வைப்புத் தொகை ரூ.57670/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி, ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) பத்தி எண்.6ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	பணியின் விவரம்	ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)	பிடித்தம் செய்யப்பட்டுள்ள நாள்	தொகை ரூபாயில்	காலங்கடந்த நிலுவை வைப்புத் தொகை (2021-22) பதிவேட்டின் பக்கம் எண் & வரிசை எண்.
1	2	3	4	5	6
1	வார்டு எண்.03க்குட்பட்ட காந்திரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீநிவாசலு நினைவு பூங்கா பகுதியில் குப்பை உருவாகும் இடத்திலேயே நுண் உரம் தயாரிக்கும் தொட்டி கட்டும் பணி இ7/7431/2017(மையம்) மதிப்பீடு ரூ.1.35 இலட்சம்	திரு.S. கோவிந்தராஜ்	26.12.2017 (காப்புத் தொகை)	5320. 00	பகுதி - X பக்கம் எண்- 39 வ.எண் -630 (மைய அலுவலகம்)
2	வார்டு எண்.13க்குட்பட்ட மெயின் கார்டுகேட் மேலரண் சாலை பொதுக்கழிப்பிடத்தில் ATM மையம் கட்டும் பணி இ7/10135./2017(மையம்) மதிப்பீடு ரூ.3.60 இலட்சம்	திரு.S. கோவிந்தராஜ்	27.03.2018 (காப்புத் தொகை)	13329. 00	பகுதி -X பக்கம் எண்- 67 வ.எண் -1101 (மைய அலுவலகம்)
3	வார்டு எண்.18க்குட்பட்ட ஜலால் குத்ரி தெரு பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.122,125,127 மற்றும் 128 ஆகியவைகளுக்கு தேவையான தண்ணீர் வசதி மற்றும் கழிப்பிட வசதி செய்து தரும் பணி இ7/7786/2017 (மையம்) மதிப்பீடு ரூ-9.80 இலட்சம்	திரு.S. கோவிந்தராஜ்	17.01.2018 (காப்புத் தொகை)	39021. 00	பகுதி -X பக்கம் எண்- 48 வ.எண் -774 (மைய அலுவலகம்)
				57670.00	

மேற்கண்டஅட்டவணையில் கண்டுள்ள பணிகளில் ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் " எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை " எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், பத்தி எண்.6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை ஒப்பந்ததாரர் திரு. S. கோவிந்தராஜ் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) ஒப்பந்ததாரர் திரு.S. கோவிந்தராஜ் திருச்சி அவர்களுக்கு ரூ.57670 /- திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ7/9730/2020 (மையம்)

தீர்மானம் எண்: 120 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:12

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட கீழ்கண்ட பணியினை திரு.வி.ஜி.கிஷோர் பாலாஜி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு மேற்படி ஒப்பந்தக்காரர் கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	பணியின் விபரம்	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள்	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்)	காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண் மற்றும் வரிசை எண்.		
				தொகுப்பு	ப.எண்.	வ.எண்
1	திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.19 எடத்தெரு சாலையில் உள்ள மழைநீர் வடிகால் மேற்புறம் ஆர்சிசி ப்ரிகாஸ்ட் சிலாப் அமைக்கும் பணி இ3/10041 /2018 (மையம்)	20.12.2018 EMD 21.06.2019 (SD) 4%	2200.00 8497.00	XI I	54 48	950 87

எனவே, பட்டியலில் கண்டுள்ள இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.2,200/- மற்றும் வைப்புத் தொகை ரூ.8,497/-ஐயும் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.வி.ஜி.கிஷோர் பாலாஜி, திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ .2,200/- மற்றும் வைப்புத் தொகை ரூ .8,497/-ஐயும் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ3/ 10041 /2018(மையம்)

தீர்மானம் எண்: 121, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள்:13

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட கீழ்கண்ட பணியினை திரு.எஸ்.பி.ராஜா, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு மேற்படி ஒப்பந்தக்காரர் கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	பணியின் விபரம்	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள்	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்)	காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண் மற்றும் வரிசை எண்.		
				தொகுப்பு	**ப.எண்.**	**வ.எண்**
1	திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.64 மூப்பனார் நகரில் சமுதாயக்கூடம் மராமத்து செய்யும் பணி இ3/2228 /2019 (மையம்)	12.02.2019 EMD 21.02.2019 ASD 01.11.2019 (SD) 4%	9500.00 9500.00 37579.00	XI XI I	71 78 98	1249 1375 116
	மொத்தம்	EMD SD	19000.00 37579.00			

எனவே, பட்டியலில் கண்டுள்ள இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.37,579/- மற்றும் வைப்புத் தொகை ரூ.19,000/-ஐயும் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பி.ராஜா, திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ .37,579/- மற்றும் வைப்புத் தொகை ரூ .19,000/-ஐயும் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ3/ 2228 /2019(மையம்)

தீர்மானம் எண்: 122, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் :14

இம்மாநகராட்சியில் நான்காவது கோட்ட அலுவலகம், மாவடி குளம் பழைய வார்டு எண்.31க்குட்பட்ட நுண்உர செயலாக்க மையம் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.28,00,000/- மதிப்பீடு தயார் செய்து, நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.141/2019-2020ன் படி, 31.07.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **M/s. எஸ்.எஸ். சுந்தர் கன்ஸ்ட்ரக்சன்ஸ்**, திருச்சி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்வதற்கு தனிஅலுவலர் அவர்களின் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், மேற்படி பணி பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிந்து, மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப் படவில்லை.

மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் 14.04.2022ம் தேதிய கடிதத்தில், மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு வேலை உத்திரவு வழங்கப்படாததால், மேற்படி பணிக்கு செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ.28,000/-ஐ (SBI DD No.201307 Dt.29.07.2019) திரும்ப வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியானது பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.141/2019-2020ஐ ரத்து செய்வதற்கும், மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ.28,000/-ஐ திரும்ப வழங்குவதற்கு, மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.141/2019-2020ல் காணும் மேற்கண்ட பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்படாததாலும், பொதுப்பணித்துறையினரால் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை ரத்து செய்து, ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட ஒப்பந்தக்காரர்கள் செலுத்தியுள்ள ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.இ1/1243/2019(மை)

தீர்மானம் எண்: 123, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

பொருள்:15

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டத்திற்குப்பட்ட கீழ்க்கண்டுள்ள பணியினை திரு.எஸ்.ராஜசேகரன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு பிடித்தம் செய்யப்பட்ட காப்புத் தொகை மற்றும் வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு கோரப்பட்ட ஒப்பந்ததாரரின் கடிதம் உதவி ஆணையர் (கணக்குகள்) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.பி5/542/2021(மையம்), நாள்.17.3.2022 உடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்டுள்ள பணியிணை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்தாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	பணியின் விபரம்	ஒப்பந்தாரர் பெயர் (திருவாளர்கள்)	வைப்புத்தொகை செலுப்பட்ட நாள்	தொகை (ரூபாயில்)	காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண்		
1	2	3	4	5	6		
					தொகுப்பு	ப. எண்	வ. எண்
1	பொன்மலைக் கோட்டத்திற்குட்பட்ட வார்டு எண்.30, மாஜி இராணுவத்தினார் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த பள்ளிக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவிட்டு இரண்டு தளங்களுடன் ஆறு வகுப்புகளை உள்ளடக்கிய புதிய பள்ளிக்கட்டிடம் மற்றும் ஆறு இருக்கைகளுடன் கூடிய கழிப்பறை கட்டும் பணி மேற்கொள்ளுதல். (இ1/9391/2016)(மை)	திரு.எஸ்.ராஜசேகரன், திருச்சி	EMD நாள்.21.3.2017	56000/-	XI	4	32
			பட்டியலில் தொகை பிடித்தம் செய்யப்பட்ட நாள்.26.04.2018	73,470/-	XI	87	1545
			பட்டியலில் தொகை பிடித்தம் செய்யப்பட்ட நாள்.04.01.2019	1,48,538/-	XI	88	1557
மொத்தம்				2,78,008/-			

எனவே, பட்டியலில் கண்டுள்ள இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை மற்றும் வைப்புத்தொகை ரூ.2,78,008/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ராஜசேகரன், அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை மற்றும் வைப்புத் தொகை ரூ.2,78,008/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

(இ1/9391/2016) (மை)

தீர்மானம் எண்: 124 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

பொருள்:16

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்– 5 க்குட்ப்பட்ட உறையூர் தினசரி சந்தை (வாலாஜா ரோடு) கட்டணம் வசூல் செய்யும் உரிமம், குழந்தலாயி மற்றும் குழுமாயி அம்மன் கோவில் திருவிழாவின் போது தண்டக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2022–2025 மூன்றாண்டு குத்தகை இனத்திற்கு நான்காவது முறையாக 18.05.2022ஆம் தேதியன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விவரம் பின்வருமாறு

வ. எ ண்	பெயர் மற்றும் முகவரி	ஏலத் தொகை கேள்வி	ஒப்பந்தப் புள்ளி தொகை	பொறுப்புத் தொகை செலுத்திய விபரம்	குறிப்பு
1	2	3	4	5	6
1	திரு.து.சரவணகுமார் 10. கனரா பேங்க் காலனி, சீனிவாச நகர், திருச்சி–17	22,00,000/–	–	ரூ.400000/– டிடி.எண்.520564– நாள்.17.05.2022. கனரா வங்கி ராமலிங்கநகர்.	மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்பந்தபுள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. 01.04.2022 முதல் மாநகராட்சி பணியாளர்கள் மூலம் துறை ரீதியாக வசூல் பணி மேற்கொண்டால் சராசரி தினசரி 3550 X365 = ரூ.12,95,750.– மட்டும் வசூலாகிறது. மேலும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இரசீது புத்தகம் ஆகியவைகளை கணக்கீடு செய்தால். ஏலம் கோரிய தொகை. ரூ. ரூ.22,00,000/– ற்கு குறைவாகவே உள்ளதால் , கடந்த 18.05.2022 முதல் நான்காவது முறையாக ஏலம் கோரிய திரு. து. சரவணகுமார் என்பவருக்கு உயர்ந்தப்பட்ச ஏலத் தொகை ரூ.22,00,000/– ஐ ஏற்று 01.07.2022 முதல் வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.
2	திரு. அன்பரசன் 16. விருப்பாச்சி புரம் அக்ரஹாரம் உறையூர், திருச்சி.	20,00,000/–	–	ரூ.400000/– டிடி.எண்.404673– நாள்.17.05.2022. கனரா வங்கி ராமலிங்கநகர்.	

<u>அலுவலகக் குறிப்பு</u>

(அ) மேற்கண்ட பட்டியலில் வரிசை எண். 1ல் கலம் 2ல் ல் உள்ள திரு. து. சரவணகுமார் என்பவர் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.22,00,000/–க்கு கோரியதை தொடர்ந்து 01.07.2022 முதல் ஒப்படைக்கலாம். மேலும் ரூ. 22,00.000 – 12 மாதம் = ரூ.1,83,334/– (ரூ.1,83,334X 9 மாதம்) ஏலத் தொகை. ரூ.16,50,006/–ஐ (2022–2023) க்கு செலுத்தவும், அனுமதி வழங்கலாம்.

(ஆ) கலம் 06ல் குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.22,00,000/–ஐ ஏற்று உரிமம் வழங்கலாம். அரசாணை 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன்படி இரண்டாம் ஆண்டிற்கு (2023–2024) முதல் ஆண்டு குத்தகை 5% உயர்வு செய்தும், மூன்றாம் ஆண்டிற்கு (2024–2025) இரண்டாம் ஆண்டுத் தொகையிலிருந்து 5% உயர்வு செய்து வழங்கலாம்.

ந.க.எண்.4574/2022/அ1 (வா, கு.அ–5)

தீர்மானம் எண்: 125, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:17

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி SBM 2.O திட்டத்தின் கீழ் , கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 121/2022–23ன் வாயிலாக 23.06.2022 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

வ. எண்	வேலையின் விவரம்	வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம்	குறிப்பு
1	வார்டு எண்.31க்குட்பட்ட கல்பாளையம் பகுதியில் பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை இடித்து விட்டு புதிய சமுதாயக்கழிப்பிடம் கட்டும் பணி (16 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ.24.00 இலட்சம் இ7/9012 /2022 (மையம்)	1. திரு. M. பொன்னுசாமி 0.05% குறைவு 2.திரு. N. ரவிக்குமார் 1.36 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு. M. பொன்னுசாமி** ஒப்பந்ததாரர், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.05% குறைவான ஒப் பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
2	வார்டு எண்.17க்குட்பட்ட வடக்கு தாரா நல்லூர் பகுதியில் சமுதாயக்கழிப்பிடம் கட்டும் பணி (10 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ. 15.00 இலட்சம் இ7/ 9013 /2022 (மையம்)	1. திரு. K. கார்த்திக் 0.05% குறைவு 2.மெசர்ஸ். GR & சன்ஸ், திருச்சி 1.35 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.K.கார்த்திக்** ஒப்பந்ததாரர் ம திப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவான ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3	வார்டு எண். 57க்குட்பட்ட எடமலைப்பட்டி புதூர் முத்து மாரியம்மன்கோயில் பகுதியில் பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (08 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ.12.00 இலட்சம் இ7/ 9029 /2022 (மையம்)	1. மெசர்ஸ். ARN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி 0.05% குறைவு 2.திரு.K.துரைராஜ், மதிப்பீட்டு விலை	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் **மெசர்ஸ். ARN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்**, திருச்சி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
4	வார்டு எண். 57க்குட்பட்டட கொல்லாங்குளம் பகுதியில் பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (6 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் இ7/9030 /2022 (மையம்)	1. மெசர்ஸ். ARN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி 0.06% குறைவு 2.திரு.K.துரைராஜ், 0.05 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் மெ சர்ஸ். ARN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
5	வார்டு எண்.30க்குட்பட்ட லாரிசெட் வளாகத்தில் உள்ள கழிப்பிடத்தை இடித்து விட்டு புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (04 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ. 6.00 இலட்சம் இ7/ 9014 /2022 (மையம்)	1. திரு.P. ஜீவானந்தம் 0.06% குறைவு 2.திரு.P.அங்கமுத்து, 0.12 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு .P. ஜீவானந்தம் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை க்காட்டிலும் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

6	வார்டு எண்.18க்குட்பட்டட பீரங்கிகுளம் பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (3 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ. 0.96 இலட்சம் இ7/ 9020 /2022 (மையம்)	1. திரு.P. ஜீவானந்தம் 0.06% குறைவு 2.திரு.P.அங்கமுத்து, 0.01 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு .P. ஜீவானந்தம் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
7	வார்டு எண்.20க்குட்பட்டட மேலப்புலிவார்டு சாலை குறுக்கு பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (3 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ. 0,96 இலட்சம் இ7/ 9015 /2022 (மையம்)	1. திருமதி .R.சந்திரா 0.06% குறைவு 2.திரு.V. திருமலைச் சாமி 1.27 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திருமதி .R.சந்திரா ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை க்காட்டிலும் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
8	வார்டு எண்.30க்குட்பட்டட எடத்தெரு பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (3 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ. 0.96 இலட்சம் இ7/ 9016 /2022 (மையம்)	1. திரு.P. ஜீவானந்தம் 0.06% குறைவு 2.திரு.P.அங்கமுத்து, 0.06 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு .P. ஜீவானந்தம் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
9	வார்டு எண்.30 க்குட்பட்டட சிறைச்சாலை சாலை (SubJail Road) பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (3 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ. 0.96 இலட்சம் இ7/ 9017 /2022 (மையம்)	1. திருமதி .R.சந்திரா 0.06% குறைவு 2.திரு.V. திருமலைச் சாமி 0.87 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திருமதி .R.சந்திரா ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
10	வார்டு எண்.26க்குட்பட்ட உய்யகொண்டான் கரை வண்ணாரப் பேட்டை அருகில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (4 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ. 1.28 இலட்சம் இ7/ 9018 /2022 (மையம்)	1. திரு .V.முத்துராமன் 0.04% குறைவு 2.திரு.K. சின்னசாமி 0.34 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் . திரு .V.முத்துராமன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூ ர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
11	வார்டு எண்.26க்குட்பட்ட உய்யகொண்டான் கரை கல்லாங்காடு அருகில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (4 எண்ணிக்கை) மதிப்பீடு ரூ. 1.28 இலட்சம் இ7/9019 /2022 (மையம்)	1. திரு .V.முத்துராமன் 0.04% குறைவு 2.திரு.K. சின்னசாமி 0.48 % கூடுதல்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் . திரு .V.முத்துராமன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு: –

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள வரிசை எண்.1 முதல் வரிசை எண்.11 வரை உள்ள பணிகளுக்கு பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரை த்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனு மதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

இ7 / 9012/2022 (மையம்)

தீர்மானம் எண்: 126, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள்: 18

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சி (கி) வட்டம், செங்குளம் கிராமம், பிளாக் எண் 31, நகரளவு எண் 41ல் மொத்த விஸ்தீரணம் 0.41.81.5 ஹெக்டேர் நிலத்தில், 0.20.90 ஹெக்டேர் நிலத்தில் மட்டும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கொட்டக்கொல்லை குடிசைவாழ் மக்களுக்கு, குடியிருப்புக்கு 200 சதுரடி வீதம் 84 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, கடந்த 1991ல் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டதாகவும், 200 சதுரடி பரப்பளவுள்ள அக்குடியிருப்பை இடித்துவிட்டு, "அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்" கீழ், 400 சதுரடி பரப்பளவு கொண்ட குடியிருப்புகள் கட்டித்தரக் கோரி தொடர் கோரிக்கைகள் வந்ததனையடுத்து, குடியிருப்புவாசிகளின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண் 2295/2021/அளவர், நாள் 22.03.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 400 சதுரடி பரப்பளவு கொண்ட குடியிருப்புக் கட்டடம் கட்ட கூடுதல் நிலம் தேவைப்படும் நிலையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் பொன்மலை – ஜி கார்னர் பகுதியில் "அதி நவீன மாடு வதைக் கூடம்" துவங்கப்பட்டுள்ளதால், ஏற்கெனவே "மாடு அடிக்கும் வதை சாலையாக" பயன்படுத்தப்பட்டு வந்த வதைக் கூடம் தற்போது பயன்பாட்டில் இல்லை எனவும், மேற்படி இடத்தில் ஓட்டுக்கூரையுடன் கூடிய மாட்டிறைச்சி விற்பனைக் கடைகள் மட்டுமே செயல்பட்டு வருவதாகவும், மேலும் மேற்படி இடத்தில் இயங்கி வரும் இறைச்சிக் கடைகளை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, 0.05.05.9 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய ஏதுவாக மாமன்றத் தீர்மானம் இயற்றி, அதன் நகலினை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில், மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், ஏற்கெனவே இயங்கி வந்த மாடு அடிக்கும் வதை சாலை, பொன்மலை – ஜி கார்னர் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டதாலும், மேலும் 84 குடியிருப்புவாசிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் மற்றும் 0.05.05.9 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி இடத்தில், மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், ஏற்கெனவே இயங்கி வந்த மாடு அடிக்கும் வதை சாலை, பொன்மலை – ஜி கார்னர் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டதாலும், 84 குடியிருப்புவாசிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் மற்றும் 0.05.05.9 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய மாமன்றம் பரிசீலித்து ஒப்புதல் வழங்கலாம்.

(எப்1/3643/2022/மையம்)

தீர்மானம் எண்: 127, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள்:19

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஒப்பந்தப்பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்வதற்கும் மற்றும் ஒப்பந்தக்காரர் பதிவு புதுப்பிப்பதற்கும் , அரசாணைகளின் படியும் மற்யும் பொதுப்பணித்துறை வழிகாட்டுதல்களின் படியும் கீழ்கண்டவாறு ஒப்பந்தக்காரர் விண்ணப்ப கட்டணம் , ஒப்பந்தக்காரர் பதிவு கட்டணம் மற்றும் பதிவு புதுப்பித்தல் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒப்பந்தக்காரர் பதிவு புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

பட்டியல் – I

வ. எண்.	ஒப்பந்தக் காரரின் வகுப்பு	ஒப்பந்தக்காரரின் பணவரம்பு மதிப்பு விபரம்	ஒப்பந்தக்காரர் விண்ணப்ப கட்டணத் தொகை ரூ.	ஒப்பந்தக்காரர் வகுப்பு பதிவு கட்டணத் தொகை ரூ.	ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒப்பந்தக்காரர் பதிவு புதுப்பித்தல் கட்டணத் தொகை ரூ.
1.	வகுப்பு – I	ரூ.75.00 லட்சத்திற்கு மேல்	1000	20000	500
2.	வகுப்பு – II	ரூ.75.00 லட்சம் வரை			
3.	வகுப்பு – III	ரூ.30.00 லட்சம் வரை			
4.	வகுப்பு – IV	ரூ.15.00 லட்சம் வரை			
5.	வகுப்பு – V	ரூ.6.00 லட்சம் வரை			

இந்நிலையில் அரசாணை (நிலை)எண்.195 பொதுப்பணித்துறை (ஜி2) நாள்.14.12.2021ன் படி, **"ஒப்பந்தக்காரர் பதிவு ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பித்தல் என்பதிலிருந்து , மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டுமெனவும், புதிய ஒப்பந்தக்காரர் பதிவு கீழ்கண்ட விபரப்படி மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் பணவரம்பு மதிப்பினை கீழ்கண்டவாறு திருத்தம் செய்தும் ஆணை பிறப்பிக்கப்பட்டது**

பட்டியல் – II

வ. எண்.	வகுப்பு	ஒப்பந்தக்காரர் தகுதி / பணவரம்பு மதிப்பு விபரம் (அரசாணை எண்.222 பொ.ப.துறை நாள்.08.04.1999	திருத்திய பண வரம்பு மதிப்பு (அரசாணை எண்.19 பொ.ப.துறை (ஜி2) நாள்.14.12.2021.)
1.	வகுப்பு – I	ரூ.75.00 லட்சத்திற்கு மேல்	ரூ.10.00 கோடிக்கு மேல்
2.	வகுப்பு – II	ரூ.75.00 லட்சம் வரை	ரூ.5 கோடி முதல் ரூ.10 கோடி வரை
3.	வகுப்பு – III	ரூ.30.00 லட்சம் வரை	ரூ.2 கோடி முதல் ரூ.5 கோடி வரை
4.	வகுப்பு – IV	ரூ.15.00 லட்சம் வரை	ரூ.50 லட்சம் முதல் ரூ.2 கோடி வரை
5.	வகுப்பு – V	ரூ.6.00 லட்சம் வரை	ரூ.50 லட்சம் வரை.

அதன்பின்னர் வரப்பெற்ற முதன்மை பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை அலுவலக சுற்றறிக்கை கடிதம் எண்.HDO(A)/32710/2014–6 நாள்.13.01.2022ல், மேற்கண்டவாறு ஒப்பந்தக்காரர் மறுபதிவிற்கு, ஒப்பந்தக்காரர்களது செல்வநிலை சான்றிதழ் மதிப்பு 30 சதவீதம் என நிர்ணயம் செய்தும், ஐந்து வருடங்களுக்கு மேல் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களது ஒப்பந்தப்பதிவு தன்னிச்சையாக ரத்து செய்யப்படும் என்றும் மற்றும் தொடர்ந்து மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற்று ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க முன்வராத ஒப்பந்தக்காரர்களது பதிவும் ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்தக்காரர் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுப்பணித்துறை அலுவலக சுற்றறிக்கை கடிதம் HDO(A)/32710/2014, நாள்.14.06.2022ல் ஒப்பந்தக்காரர் பதிவு புதுப்பித்தல் 31.07.2022 வரை கால நீட்டிப்பு செய்யப் பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக தற்போது வரப்பெற்றுள்ள அரசாணை (நிலை)எண்.37 பொதுப் பணித்துறை (ஜி2) நாள்.17.06.2022ல், மேற்கண்ட அரசாணையில் திருத்தம் செய்து, ஒப்பந்தக்காரரின் பணவரம்பு மதிப்பு மற்றும் கலம் எண் .5ல் கண்டுள்ள செல்வநிலை சான்றிதழ் மதிப்பு கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு உயர்த்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

பட்டியல் – III

வ. எண்.	வகுப்பு	திருத்திய பண வரம்பு மதிப்பு (அரசாணை எண்.19 பொ.ப.துறை (ஜி2) நாள்.14.12.2021.)	புதிய பண வரம்பு மதிப்பு (அரசாணை எண். 37 பொ.ப.துறை (ஜி2) நாள்.17.06.2022.	திருத்திய செல்வநிலை (Solvency Certificate) சான்றிதழ் மதிப்பு
(1)	(2)	(3)	(4)	(5)
1.	வகுப்பு – I A	–	ரூ.25 கோடிக்கு மேல்	ரூ.2.50 கோடி.
2.	வகுப்பு – I	ரூ.10.00 கோடிக்கு மேல்	ரூ.10 கோடி முதல் ரூ.25 கோடி வரை	ரூ.1.50 கோடி.
3.	வகுப்பு – II	ரூ.5 கோடி முதல் ரூ.10 கோடி வரை	ரூ.5 கோடி முதல் ரூ.10 கோடி வரை	ரூ.75 லட்சம்.
4.	வகுப்பு – III	ரூ.2 கோடி முதல் ரூ.5 கோடி வரை	ரூ.2 கோடி முதல் ரூ.5 கோடி வரை	ரூ.30 லட்சம்.
5.	வகுப்பு – IV	ரூ.50 லட்சம் முதல் ரூ.2 கோடி வரை	ரூ.50 லட்சம் முதல் ரூ.2 கோடி வரை	ரூ.10 லட்சம்.
6.	வகுப்பு – V	ரூ.50 லட்சம் வரை.	ரூ.50 லட்சம் வரை.	ஒப்பந்தக்காரர் பதிவு மதிப்பில் 15 சதவீத தொகை.

மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண் .6ல் காணும் 5ம் வகுப்பு பதிவின் கீழ் , ரூ.50 லட்சம் வரை ஒப்பந்ததாரர் பதிவு செய்வதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது , செல்வநிலை சான்றிதழ் 15 சதவீதம் (ரூ.7.50 லட்சம்) என நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும், உதாரணமாக இவ்வகுப்பின் கீழ் ரூ. 20 லட்சம் வரை ஒப்பந்ததாரர் பதிவு செய்வதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது, செல்வநிலை சான்றிதழ் இந்த மதிப்பில் 15 சதவீதம் ரூ.3.00 லட்சம் என நிர்ணயிக்கப்பட வேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது

மேற்கண்ட அரசாணையில் காணும் வழிகாட்டுதல்களின் படியும், பொதுப்பணித்துறை அலுவலக சுற்றறிக்கையின் படியும், உரிய நடவடிக்கை மேற்கொண்டு பின்வரும் பட்டியலின் கலம் எண்.5, 6 மற்றும் 7ல் கண்டுள்ளவாறு கட்டணத் தொகைகளை நிர்ணயம் செய்வதற்கும், அனைத்து ஒப்பந்தக்காரர்களது பதிவினை மறுபதிவு மேற்கொள்வதற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பட்டியல் –IV

01.08.2022 முதல் ஒப்பந்தக்காரர் மறுபதிவுமற்றும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தக்கார்ரர் பதிவு புதுப்பித்தல் பட்டியல்

வ. எண்.	வகுப்பு	அரசாணை எண்.37 பொ.ப.துறை (ஜி2) நாள்.17.06.2022.		நிர்ணயம் செய்யப்பட வேண்டிய கட்டணத் தொகை விபரம்		
		புதிய பண வரம்பு மதிப்பு	திருத்திய செல்வநிலை (Solvency Certificate) சான்றிதழ் மதிப்பு	விண்ணப்ப கட்டணத் தொகை ரூ.	மறுபதிவு கட்டணத் தொகை ரூ.	3 ஆண்டுக்கு ஒரு முறை பதிவு புதுப்பித்தல் கட்டணத் தொகை ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	வகுப்பு – I A	ரூ.25 கோடிக்கு மேல்	ரூ.2.50 கோடி.	5000	125000	63000
2.	வகுப்பு – I	ரூ.10 கோடி முதல் ரூ.25 கோடி வரை	ரூ.1.50 கோடி.	5000	75000	38000
3.	வகுப்பு – II	ரூ.5 கோடி முதல் ரூ.10 கோடி வரை	ரூ.75 லட்சம்.	4000	40000	19000
4.	வகுப்பு – III	ரூ.2 கோடி முதல் ரூ.5 கோடி வரை	ரூ.30 லட்சம்.	3000	20000	8000
5.	வகுப்பு – IV	ரூ.50 லட்சம் முதல் ரூ.2 கோடி வரை	ரூ.10 லட்சம்.	2000	20000	3000
6.	வகுப்பு – V	ரூ.50 லட்சம் வரை.	ஒப்பந்தக்காரர் பதிவு மதிப்பில் 15 சதவீத தொகை.	1000	20000	2000
		ரூ.35 லட்சம் வரை.		1000	20000	1500
		ரூ.20 லட்சம் வரை.		1000	20000	1000

எனவே தற்போது வரப்பெற்றுள்ள மேற்கண்ட அரசாணையின் படி, மேற்கண்ட பட்டியல்–IVல் கண்டுள்ள புதிய பண வரம்பு மதிப்பு மற்றும் திருத்திய செல்வநிலை சான்றிதழ் மதிப்பின் அடிப்படையில், இம்மாநகராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்தக்காரர்கள் தங்களது பதிவினை 01.08.2022 முதல் 31.03.2025 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு மறுபதிவு செய்வதற்கும், மூன்றாண்டுகளுக்கு (01.04.2025–31.03.2028) ஒருமுறை ஒப்பந்தக்காரர் பதிவு புதுப்பிப்பதற்கு, மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு கட்டணத் தொகைகளை நிர்ணயம் செய்து, நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அ) அரசாணை (நிலை)எண்.37 பொதுப்பணித்துறை (ஜி2) நாள்.17.06.2022ன் படி, ஒப்பந்தக்காரர்களுக்கு புதிய பணவரம்பு மதிப்பு மற்றும் புதிய செல்வநிலை சான்றிதழ் மதிப்பின் படி 01.08.2022 முதல் 31.03.2025 வரை ஒப்பந்தக்காரர் பதிவினை மறுபதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், ஒப்பந்தக்காரர் மறுபதிவு கட்டணத் தொகை மற்றும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தக்காரர் பதிவு புதுப்பித்தல் கட்டணத் தொகைகளை மேற்கண்ட பட்டியல் – IVல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) ஐந்து வருடங்களுக்கு மேல் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களது ஒப்பந்தப்பதிவு தன்னிச்சையாக ரத்து செய்யப்படும் என்றும் மற்றும் தொடர்ந்து மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற்று ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க முன்வராத ஒப்பந்தக்காரர்களது பதிவும் ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்தக்காரர் பதிவு மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

இ) மூன்றாண்டு காலத்திற்குள் ஒப்பந்தக்காரர் பதிவு புதுப்பிக்காத ஒப்பந்தக்காரர்களிடம் அபராத தொகையாக ரூ.3000/– வசூலிப்பதற்கும் அனுமதி அளிக்கலாம்.

ஈ) மேற்கண்ட ஒப்பந்தக்காரர் பதிவு மற்றும் பதிவு புதுப்பித்தல் கட்டண விகிதங்களை திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும் அதற்காகும் செலவினத் தொகைகளை வழங்குவதற்கும் அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.இ1/8379/2022(மையம்)

தீர்மானம் எண்: 128 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:20

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வார்டு எண்.57க்குட்பட்ட கொல்லாங்குளம் குளத்தினை மேம்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். அதனை தொடர்ந்து கொல்லாங்குளம் (எடமலைப்பட்டி புதூர் பகுதி மற்றும் கருமண்டபம் பகுதி) குளத்தினை மேம்படுத்த மதிப்பீடு, வரைபடம், கட்டமைப்பு வடிவம், ஆவணங்கள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை போன்ற ஆவணங்கள் தயாரிக்க கலந்தற்குரியர் (Consultant) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மேற்படி, குளத்தில் பார்வையாளர்கள் பகுதிகள் உருவாக்குதல், சைக்கிள் ஓட்டுதல் மற்றும் நடைபயிற்சி பாதை அமைத்தல், மீன்பிடி தளம் அமைத்தல், பக்கவாட்டு தடுப்பு சுவர்கள், திறந்தவெளி திரையரங்கம், நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், தடுப்பு வேலி, அணுகு சாலை அமைத்தல், முனையத்தை அழகுப்படுத்தல் (Terminal Node) மற்றும் கிராப்பட்டி பாலத்தின் கீழ் அழகுப்படுத்தும் பணிகள் போன்ற பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை கீழ்க்கண்டுள்ளவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	பணிகள்	பகுதி அளவு (ஏக்கர்)	மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்)
1	வார்டு எண்.57க்குட்பட்ட (பழைய வார்டு எண்.40) கொல்லாங்குளம் (எடமலைப்பட்டிபுதூர் பகுதி) குளத்தில் பார்வையாளர்கள் பகுதிகள் உருவாக்குதல், சைக்கிள் ஒட்டுதல் மற்றும் நடைபயிற்சி பாதை அமைத்தல், மீன்பிடி தளம் அமைத்தல், பக்கவாட்டு தடுப்பு சுவர்கள், திறந்தவெளி திரையரங்கம், நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், தடுப்பு வேலி, அணுகு சாலை அமைத்தல், முனையத்தை அழகுப்படுத்தல் (Terminal Node) மற்றும் கிராப்பட்டி பாலத்தின் கீழ் அழகுப்படுத்தும் பணிகள் போன்றவை அமைக்கும் பணிகள் (Ward AL, Block No.21, TS. No.01, 08)	25.99 (145647.40 சதுர.மீ)	31.61
2	வார்டு எண்.57க்குட்பட்ட (பழைய வார்டு எண்.40) கொல்லாங்குளம் (கருமண்டபம் பகுதி பகுதி) குளத்தில் பார்வையாளர்கள் பகுதிகள் உருவாக்குதல், சைக்கிள் ஒட்டுதல் மற்றும் நடைபயிற்சி பாதை அமைத்தல், மீன்பிடி தளம் அமைத்தல், பக்கவாட்டு தடுப்பு சுவர்கள், திறந்தவெளி திரையரங்கம், நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், தடுப்பு வேலி, அணுகு சாலை அமைத்தல், முனையத்தை அழகுப்படுத்தல் (Terminal Node) பணிகள் போன்றவை அமைக்கும் பணிகள் (Ward AL, Block No.21, TS. No.01, 08)	19.49 (78896.20 சதுர.மீ)	15.45
	மொத்தம்		47.06

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. அனுமதி அளிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்.
3. மேற்கண்ட திட்டப் பணிகளை மேற்கொள்ள ஏதெனும் அரசு திட்டத்தின் கீழ் , நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் பெற்று இப்பணிகளை மேற்கொள்ளலாம்.

இ2/ 9436/2022(மையம்)

தீர்மானம் எண்: 129, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:21

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அரசுப்பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த சமையற் கூடம் (Centralized Community Kitchen) அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/எம்.சி.ஏ –2 நாள். 14.07.2022ல் தெரிவித்துள்ளதற்கிணங்க, இம்மாநகராட்சியில் கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

வ.எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு ரூ. இலட்சத்தில்
1	வார்டு எண்.30க்குட்பட்ட சையது முர்துஷா அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையற் கூடம் (Centralized Community Kitchen) கட்டும் பணி (வடக்கு பகுதி)	46.00
2	வார்டு எண்.30க்குட்பட்ட சையது முர்துஷா அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையற் கூடும் (Centralized Community Kitchen) கட்டும் பணி (மேற்கு பகுதி)	23.00
3	வார்டு எண்.30க்குட்பட்ட சையது முர்துஷா அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையல் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் வழங்கி பொருத்தி இயக்கும் பணி (Centralized Community Kitchen)	20.00

4	வார்டு எண்.30க்குட்பட்ட சையது முர்துஷா அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையல் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் வழங்கி பொருத்தி இயக்கும் பணி (Centralized Community Kitchen) (வடக்கு பகுதி –2)	20.00
5	வார்டு எண்.30க்குட்பட்ட சையது முர்துஷா அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையல் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் வழங்கி பொருத்தி இயக்கும் பணி (Centralized Community Kitchen) (மேற்கு பகுதி)	20.00

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

1. அட்டவணையில் கண்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி திட்டம் மாநில அரசால் வழங்கப்படும் நிதி ஆதராத்தின் அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு அனுமதி அளிக்கலாம்.

இ7/9731/2022 (மையம்)

தீர்மானம் எண்: 130, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:22

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண் IV குட்பட்ட 52,53,54,61,62, 63,64(பழைய வார்டு 38) மற்றும் 65 ஆகிய வார்டு பகுதிகளில் உள்ள நுண் உர செயலாக்க மையங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தூய்மைப் பணியாளர்கள் நிலைகளில் இம்மாநகராட்சியில் பல்வேறு காரணங்களினால் ஏற்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் காலிப் பணியிடங்களின் அடிப்படையில் மற்றும் மாநகராட்சியை தூய்மையாகப் பராமரிக்க போதிய துப்புரவுப் பணியாளர் இல்லாத நிலையில் நுண் உர செயலாக்க பணியினை 52,53,54,61,62, 63,64(பழைய வார்டு 38) மற்றும் 65 ஆகிய வார்டு பகுதிகளில் 144 மனித ஆற்றல்கள் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Sl. No	Name	Ward (old)	Ward (New)	Total No.of. Workers
1	2	3	4	5
1	IMAYAM	35	61	19
2	MULLAI MALAR	37	65	20
3	THENDRAL	38	63,64	21
4	PASUMAI POONGA	39	62	23
5	THAMARAIKODI	44	53	20
6	SENJUDAR	46	54	21
7	SEMBARUTHI	47	52	20
	TOTAL			**144**

இந்நிலையில் எதிர்வரும் நிதியாண்டிற்கு 01.07.2022முதல் 30.09.2022 வரை (2022–2023) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள மண்டலம் எண் IVக்குட்பட்ட 144 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

இவ்வாறு பணி அமர்த்துவதால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ.எண்	மண்டலம் -4	பணியாளர்களி எண்ணிக்கை	வேலை நாட்கள்	மொத்த மனித வேலை நாட்கள்	நாள் 1க்கு நபர் 1க்கு ஊதியம் ரூ	ஊதியம் கலம் (4 X 5) ரூ.	தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13ரூ (கலம் 6 X 13ரூ) நிர்வாக பங்கு தொகை	ESI நிர்வாக பங்கு தொகை(கலம் 7 X 3.25 ரூ)	மொத்த ஊதியம் கலம் 7+8+9
1	2	3	4	5	6	7	8	9	10
1	IV	144	6	864	461	398304	51780	12945	463029
			86	12384	575	7120800	925704	231426	8277930
கூடுதல்			92	13248	1036	7519104	977484	244371	8740959

மேற்கண்ட அட்டவணையில் கலம் எண் 10ல் 01.07.2022 முதல் 30.09.2022 வரை மூன்று மாத காலத்திற்கு 144 எண்ணிக்கையில் தற்காலிக தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்த ஆகும் செலவின தொகை ரூ. 8740959/- ஆக கணக்கிடப்பட்டுள்ளது

திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.07.2022 முதல் 30.09.2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்தும், இதற்கான உத்தேச செலவினம் ஊதியமாக ரூ. 8740959/- க்கு மாமன்ற அனுமதி வேண்டியும் பொருள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது

அ.கு:-1. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.07.2022 முதல் 30.09.2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்யஅனுமதி வழங்கலாம்

2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினதொகை ரூ. 8740959/- க்கு அனுமதி வழங்கலாம்.

3. மேற்கண்ட செலவின தொகையினை இம்மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கை (22- 23) க்கு கணக்கு தலைப்பு எண் 2101010ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

எச்1/ 3777/2022(ம-4)

தீர்மானம் எண்: 131 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:23

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு எண்.1-உட்பட்ட பகுதிகளில் வீடுவீடாக சென்று சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று தரம் பிரித்து அதில் மக்கும் குப்பைகளை கொண்டும் உரமாக்கும் பணி கீழ்கண்ட சுய உதவிகுழு தூய்மை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வ.எண்	வார்டு எண்	சுய உதவிக்குழுக்களின் பெயர்கள்	குழுவிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(3)
1	1	விவேகம்	19
2	2	ஸ்ரீ ராகவேந்திரா	18
3	3	தீபம்	19
4	4	மலைக்கோட்டை	20
5	5	தென்றல்	20
6	6	கண்ணகி	20
7	7	அரங்கநாதர்	20
மொத்தம்			136

மேற்சொன்ன பணியாளர்களுக்கு 30.06.2022-வுடன் நிர்வாக அனுமதி முடிவுற்றதால் ஜுலை-2022 முதல் செப்டம்பர்-2022 வரை மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து பணியாளர்களை பணி அமர்த்திக் கொள்ளவும் நாளொன்றுக்கு ரூ.575/-(575 x92 = ரூ.52,900 x136 = ரூ.71,94,400/-) இதற்கான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் (EPF) நிர்வாக பங்குதொகை 13% சதவீதம் ரூ.9,35,272/-மற்றும் ESI - 3.75 % = ரூ.2,33,818/- ஆக மொத்தம் ரூ.83,63,490/- ஆகும்.

அலுவலகக் குறிப்பு:

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண்.1ல் உட்பட்ட பகுதிகளில் நுண்ணுயிர் உரக்கிடங்கில் பணிபுரியும் 136 சுய உதவி குழு தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பணியமர்த்தி கொள்ளவும், ஜீலை–2022 முதல் செப்டம்பர்–2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்க தொகை ரூ. 83,63,490/–ஐ மாமன்ற அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண் அ5/1249/2022(வா.கு.எ–1)

தீர்மானம் எண்: 132, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்:24

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு எண்.1–உட்பட்ட பகுதிகளில் வீடுவீடாக சென்று சேகரிக்கப்படும் திடக்கழிவு குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று தரம் பிரித்து வாங்கும் பணிக்காக கீழ்காணும் சுய உதவிக்குழு தூய்மைப் பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வ. எண்	வார்டு எண்	சுய உதவிக்குழுக்களின் பெயர்கள்	குழுவிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை
(1)		(2)	(3)
1	12	அரங்கர்	18
		ஆண்டாள்	15
		அய்யாளம்மன்	14
2	13	தாயுமாணவர்	16
3	14	மாணிக்க விநாயகர்	17
4	15	பைரவா	18
5	19	அப்துல்கலாம்	15
6	21	ஆம்பல்	16
7	CBS	விழுதுகள் , விருட்சம்	25
மொத்தம்			**154**

மேற்சொன்ன பணியாளர்களுக்கு 30.06.2022–வுடன் நிர்வாக அனுமதி முடிவுற்றதால் ஜுலை–2022 முதல் செப்டம்பர் –2022 வரை மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து பணியாளர்களை பணி அமர்த்திக் கொள்ளவும் நாளொன்றுக்கு ரூ.575/–(575 x92 = ரூ.52,900 x154 = ரூ.81,46,600/–) இதற்கான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் (EPF) நிர்வாக பங்குதொகை 13% சதவீதம் ரூ.10,59,058/– மற்றும் ESI – 3.75 % = ரூ.2,64,765/– ஆக மொத்தம் ரூ.94,70,423/– ஆகும்.

அலுவலகக் குறிப்பு:

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண்.1ல் உட்பட்ட பகுதிகளில் திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று குப்பைகளை தரம் பிரித்து வாங்குவதற்காக 154 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பணியமர்த்தி கொள்ளவும், ஜீலை–2022 முதல் செப்டம்பர்–2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்க தொகை ரூ. 94,70,423/–ஐ மாமன்ற அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண். அ5/1248/2022 (வா.கு.எ–1)

தீர்மானம் எண்: 133, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:25

இம்மாநகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.பி.சாரதா, என்பவரால் மாண்புமிகு மேயர் அவர்களின் குறைத்தீர்க்கும் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தில், தான் ஒரு மாற்று திறனாளி என்றும், தான் பத்தாம் வகுப்பு முடித்துள்ளதாகவும், தான் கடந்த 15 ஆண்டுகளாக துப்புரவு பணியாளராக பணியாற்றி வருவதாகவும், தனக்கு 2 சின்ன குழந்தைகள், வயதான மாமியார், மாமனார், ஆகியோர்களை பார்த்துக் கொள்வது தன்னுடைய கடமை என்றும், இந்த வேலையின் காரணமாக தான் திருச்சியிலும், தன் கணவர் மற்றும் தன் குடும்பம் சொந்த ஊரான காருகுடியிலும் பிரிந்து இருக்கிறோம் என தெரிவித்துள்ளார்.

மேலும், தன் கணவருக்கு குடும்பத்தை பார்த்துக் கொள்ளும் அளவுக்கு வருமானம் கிடையாது என்றும், தன்னுடைய ஊதியத்தை வைத்து தான் தன் குடும்பத்தை சமாளித்து வருவதாகவும், நானும் என் கணவரும் கடந்த 15 ஆண்டுகளாக மனம் நொந்து வாழ்கிறோம் என்றும், தனக்கு தயவு செய்து துறையூர் நகராட்சி அலுவலகத்தில் உதவி பணியாளராக மாற்றிக் கொடுக்கும்படி கோரியுள்ளார்.

எனவே, மேற்படி தூய்மைப் பணியாளரின் கோரிக்கையின் பேரில், துறையூர் நகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் செய்ய ஏதுவாக பணியாளரின் கோரிக்கையின் மீது மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி ஆணையர், துறையூர் நகராட்சிக்கு அனுப்பி வைப்பது குறித்து பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

தனியரின் மேற்படி தூய்மைப் பணியாளரின் குடும்ப சூழ்நிலை கருத்தில் கொண்டு ஒரு வழி பணிமாறுதல் அடிப்படையில் துறையூர் நகராட் சிக்கு பணிமாறுதலில் செல்ல தீர்மானம் நிறைவேற்றி ஆணையர் , துறையூர் நகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்க ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 8776 / 2022 / சி1(மை)

தீர்மானம் எண்: 134, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:26

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 5 – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினக்கூலி அடிப்படையில் 157 சுய உதவி குழு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு திடக்கழிவு பணிகள் பாதிப்படையாத வகையில் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட 7 நுண்உர செயலாக்க மையத்தில் குழுக்களில் உள்ள 157 பணியாளர்களை தொடர்ந்து பணியமர்த்தி கொள்வதற்கும் (2022–2023) ம் நிதியாண்டில் மூன்று மாதங்களுக்கு அப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய செலவினம் (157 X 575 X 90275 X 92 நாட்களுக்கு) = ரூ.8305300/– ஆகும். மேலும், கூடுதலாக நிர்வாகத்தின் (Management contribution) 13ரூ ரூ.10,79,689/– மற்றும் ESI பங்குத்தொகை 3.25ரூ ரூ.2,69,922/–ம் ஆக கூடுதல் தொகை ரூ.96,54,911/– ஆகும்.(92 நாட்களில் ஞாயிறு கிழமை உள்பட மற்றும் தொழிலாளர் நல நிதி உள்பட) (01.07.2022 முதல் 30.09.2022 வரை) ஊதியம் வழங்க நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை		நுண்உர செயலாக்கமையம்	ஊதியம் வழங்க வேண்டிய காலம்	ஊதியம் வழங்க வேண்டிய காலம்			உத்தேச செலவினத் தொகை				
1	45	ஜெய்ஹிந்த்	10	கருமண்டபம்	01.07.2022 30.09.2022	10	x	575	x	5750	x	92	529000
2	49	சூரியன்	10	குழுமிக்ககரை	01.07.2022 30.09.2022	10	x	575	x	5750	x	92	529000
3	50	சந்திரன்	13		01.07.2022 30.09.2022	13	x	575	x	7475	x	92	687700
4	51	பாலக்காடு	14	உழவர்சந்தை	01.07.2022 30.09.2022	14	x	575	x	8050	x	92	740600
5	52	ஸ்ரீஐயப்பன்	11	வயலூர் ரோடு	01.07.2022 30.09.2022	11	x	575	x	6325	x	92	581900
6	53	திருமலை	12		01.07.2022 30.09.2022	12	x	575	x	6900	x	92	634800
7	54	குழுமாயி	14	கல்லாங்காடு	01.07.2022 30.09.2022	14	x	575	x	8050	x	92	740600
8	55	தில்லை	11	குழுமிக்ககரை	01.07.2022 30.09.2022	11	x	575	x	6325	x	92	581900
9	56	திருச்சி	15	வாமடம்	01.07.2022 30.09.2022	15	x	575	x	8625	x	92	793500
10	57	ஸ்ரீ அம்மன்	12	கோணக்கரை	01.07.2022 30.09.2022	12	x	575	x	6900	x	92	634800
11	58	ஸ்ரீ விநாயகர்	12		01.07.2022 30.09.2022	12	x	575	x	6900	x	92	634800
12	59	தொடரும்	10	பனிக்கன் தெரு	01.07.2022 30.09.2022	10	x	575	x	5750	x	92	529000
13	60	தூய்மை	13		01.07.2022 30.09.2022	13	x	575	x	7475	x	92	687700
			மொத்தம்			157	X	575	X	90275	X	92	8305300

அலுவலகக்குறிப்பு :

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் நுண் உர செயலாக்க மையத்தில் பணிபுரியும் சுயஉதவிக் குழு பணியாளர்கள் 157 நபர்களை தொடர்ந்து பணியில் பயன்படுத்தி கொள்ளவும், 01.07.2022 முதல் 30.09.2022வரை சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய தினக்கூலி உத்தேச செலவினம் ரூ.96,54,911/-க்கு அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.சி1/5234/2021(கோ.அபி)

தீர்மானம் எண்: 135, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:27

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள விடுபட்ட பகுதிகளில் புதைவடிகால் திட்டம் செயல்படுத்திட அரசாணை எண்.15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.09.02.2012 நிர்வாக அனுமதி ரூ.24.00 கோடிக்கு TNUDF நிதி உதவியுடன் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மெசர்ஸ். அபிராம் இன்ஃப்ரா ஃப்ராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்., பெங்களூர் நிறுவனத்திற்கு 05.04.2013 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி துவக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்த பணியினை முடிக்காமல் மேற்படி நிறுவனம் 22.05.2017ல் பாதியிலேயே விட்டுவிட்டு ஒப்பந்தத்தை முடித்து கொள்வதாக மாநகராட்சியிடம் கடிதம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள். ஒப்பந்தப்பணி நிமித்தம் வழங்காமல் இருந்த தொகைக்கு மேற்படி நிறுவனம் நடுவர் தீர்ப்பாயத்திற்கு மனு செய்ததில் தீர்ப்பாயம் (Ar.O.P.No.359/2018) ஒப்புக்கொள்ளப்பட்ட பணிக்காக ரூ.1,30,27,357/- தொகையையும், ரூ.60,36,320/-ஐ அவருடைய லாபத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்காகவும் 13.12.2018 முதல் 30.10.2019 முடிய 16% வட்டியும், தீர்ப்பாயத்தில் விதிக்கப்பட்ட தொகையினை 2 மாத காலத்திற்குள் கொடுக்க தவறும் பட்சத்தில் அவார்டு தொகைக்கு கொடுத்து முடியும் காலம் வரை 18% வட்டி வழங்க நடுவர் மன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கு தீர்ப்பு மாநகராட்சிக்கு சாதகமாக வரவில்லை என்பதால், இந்த தீர்ப்பினை எதிர்த்து திருச்சிராப்பள்ளி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு (Arbitration case) எண். Ar.O.P.No.22/2020 மாநகராட்சியால் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

இதற்கிடைய மேற்படி நிறுவனம் EP no.328/2020 மற்றும் 347/2020 ஆகிய இரண்டு நிறைவேற்று மனுக்களை மேற்படி அவார்டு தொகையை வசூல் செய்வதற்காக தாக்கல் செய்துள்ளது. இதில் ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலகத்தை ஜப்தி செய்யவும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வங்கி கணக்கை முடக்கவும், மேற்காணும் நிறுவனத்தால் மேற்படி நிறைவேற்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

மாநகராட்சி வழக்குறைஞரின் ஆலோசனைப்படி ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்த தொகையில் மீதம் கொடுக்க வேண்டிய தொகையான ரூ.1,37,27,357/-ஐ இரண்டு தவணைகளில் 10.02.2021 தேதியிட்ட காசோலை எண்.574628 மூலம் ரூ.91,19,150/-ம் மீதமுள்ள தொகை ரூ.39,08,207/-ம் காசோலை எண்.418182 நாள்.03.11.2021ல் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்ததாரர் 15.06.2022 அன்று மாநகராட்சி அலுவலகத்தில் நேரில் வந்து மாநகராட்சி பொறியாளர் அவர்களை சந்தித்து இது தொடர்பாக கலந்து பேசப்பட்டது. இதில் மனுதாரர் கோரிய வட்டி தொகை 18% சதவீதத்திலிருந்து 9 % சதவீதமாக குறைத்து பெற்றுகொள்ள சம்மதித்தும், மீண்டும் ஆணையர் அவர்களை சந்தித்த போது வட்டி தொகையினை 7% சதவீதமாக குறைத்து பெற்று கொள்ள சம்மதித்துள்ளார். ஒப்பந்ததாரரால் தொடரப்பட்ட வழக்கு 16.06.2022 அன்று திருச்சிராப்பள்ளி முதன்மை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரப்பெற்றது.

இவ்விசாரணையில் மாநகராட்சி அரசு வழக்கறிஞரும் எதிர்தரப்பு வழக்கறிஞரும் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையின்படி 7% சதவீத வட்டி தொகை ரூ.1,81,10,959/-ஐ 10 தினங்களுக்குள் மாநகராட்சி நிர்வாகம் ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் இருதரப்பு சார்பாக வழக்கறிஞர்கள் சம்மத கடிதம் நீதிமன்றத்தில் சார்வு செய்தனர். இதனை நீதிமன்றம் ஏற்று மீண்டும் 05.07.2022 தேதியன்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டதால், வழக்கின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் ஒப்புதல் பெறப்பட்டு, மேற்கண்ட தொகையினை ஒப்பந்ததாரருக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பின்னேற்பு அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. இப்பணி TNUDF திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டப் பணியாக இருப்பதால் இத்தொகையினை ஒப்பந்ததாரருக்கு வழங்குமாறு பெறப்பட்ட நீதிமன்ற தீர்ப்பினை ஏற்கலாம்.
3. நீதிமன்றத்தில் வழக்கில் கோட்ட அலுவலகத்தினை ஜப்தி செய்திடவும், மாநகராட்சி கணக்கினை முடக்கிட வழக்கு பதிவு செய்துள்ளதால் பேச்சுவார்த்தையின்படி 7% சதவீத வட்டி தொகை ரூ.1,81,10,959/-ஐ ஒப்பந்ததாரருக்கு செலுத்த அனுமதி அளிக்கலாம்.
4. இத்திட்ட பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் முடிவுறு அறிக்கை பெறப்பட்டவுடன், மெசர்ஸ்.அபிராம் இன்ஃப்ரா ஃப்ராஜக்டஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர் நிறுவனத்தாருக்கு வழங்கப்படும் தொகையிலிருந்து 20% சதவீதம் பிடித்தும் செய்தும், அறிக்கை வரப்பெற்றவுடன் பிடித்தம் செய்த தொகையினை திரும்ப வழங்கவும் அனுமதி அளிக்கலாம்.
5. மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று ரூ.1,81,10,959/-ல் 80 சதவீத தொகை ரூ.1,44,88,767/- மட்டும் ஒப்பந்ததாரருக்கு வழங்கியதை மாமன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

இ4/11063/2018/மையம்

தீர்மானம் எண்: 136, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்: 28

மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண். ஆ3/10364/2022, நாள் 22.03.2022ம் நாளைய கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு Y, பிளாக் எண் 7, நகரளவு எண்கள் 67, 68 மற்றும் 69க்குட்பட்ட நிலத்தில், 5000 சதுரடிகள் பரப்பளவில், அரசு மருத்துவமனை காவல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்ய ஏதுவாக மாநகராட்சியில் தீர்மானம் இயற்றி, தீர்மான நகலினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மேற்படி இடம் நகரளவை ஆவணங்களில் நகராட்சி பூங்கா எனவும், அங்கீகரிக்கப்பட்ட புத்தூர் மேற்கு விஸ்தரிப்பு நகரமைப்புத் திட்டத்திலும் பூங்கா எனவும் வரையறுக்கப்பட்டுள்ளதால், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கு எண் WA 156 of 2000 and 45 of 2003, நாள் 12.04.2007ம் தேதிய தீர்ப்புரையின்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு விரிவு அபிவிருத்தித் திட்டம் மற்றும் முழுமைத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது உபயோக இடங்களை வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட நிலத்தினை காவல் துறைக்கு நில மாற்றம் செய்ய வழிவகை உள்ளதா என்பது குறித்து தெளிவுரை வழங்க கோரி, இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களின் கடிதத்தில், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகள் (TNCDBR) 2019. விதி எண் 47(6)(c)ன் படி, "Structures for Watchman's booth, Gardener's instrument room, Public Toilet and Police booth for the purpose of maintenance and toilets may be permitted with total floor area not exceeding 5% the total OSR area in one place" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்படி பொருள் தொடர்பாக நகரளவர் அவர்களின் குறிப்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி மேற்கு வட்டம், வார்டு Y, பிளாக் எண் 7, நகரளவு எண் 65,67,68 மற்றும் 69ல் கட்டுப்பட்ட மொத்த பரப்பில் 0.1484.0 ஹெக்டேர் (1484 சதுர மீட்டர்) பரப்புள்ள நிலம், நகரளவை ஆவணங்களில் (பூங்கா , சந்து பைப்லைன்) என பதிவேட்டில் உள்ளது .மேற்கண்ட இடம் மாநகராட்சிக்கு பூங்காவிற்கு என ஒதுக்கப்பட்டுள்ள இடமாகும். பழைய முனிசிபல் ரிஜிஸ்டர் கலத்தில் நகராட்சி பூங்கா என்றும், சர்க்கார் புறம்போக்கு எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கூறிய மொத்தப் பரப்பளவான 0.1484.0 ஹெக்டேரில் (1484 சதுர மீட்டர்) 74.3 ச.மீ. இடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாயிலாக நில உரிமை மாற்றம் செய்து வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. அரசு மருத்துவமனை காவல் நிலையம் கட்ட 74 .3 ச.மீ இடத்தினை ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்கூறிய இடமானது, சர்க்கார் புறம்போக்கு என உள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முன் நுழைவு அனுமதி பெறுவதற்கு கடிதம் அனுப்பி வைக்கலாம்.

(எப்1/4779/2022/கோ.அபி)

தீர்மானம் எண்: 137, அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள்: 29

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள தலைமை நீர்ப்பணி நிலையத்தில் 1000 கே.வி.ஏ டிரான்ஸ்பார்மர்கள், 11 கே.வி.ஏ HT பேனல்கள், LT பேனல்கள், 335 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார்கள், 25 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார்கள், அதற்கான ஸ்டார்ட்டர்கள் மற்றும் பேனல்கள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய மின்னியல் சார்ந்த உபகரணங்களை இயக்கிட போதிய தகுதி வாய்ந்த பணியாளர்கள் இம்மாநகராட்சியில் இல்லாத காரணத்தாலும், நீர்ப்பணி நிலைய வளாகத்தை பராமரித்திடவும் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், மின் ஆய்வாளர், திருச்சி அவர்களது வருடாந்திர ஆய்வின்போது வழங்கப்பட்ட அறிவுரையில் விதி எண்.5(4)ன்படி போதிய கல்வி தகுதி வாய்ந்த மின்னியல் தொழில்நுட்ப பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் தங்களது 28.11.2014ம் தேதிய கடிதத்தில் தெரிவித்ததை தொடர்ந்து 10.07.2019 முதல் தனியார் மூலம் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், இப்பணி 13.07.2022 உடன் முடிவடைய உள்ளது.

எனவே பொதுமக்களுக்கு வழங்கிடும் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தலைமை நீர்ப்பணி நிலையத்தினை தொடர்ந்து இயக்கி பராமரித்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியலின் விலையை கொண்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.25.65 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. இப்பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.25.65 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி அளிக்கலாம்.
4. அவ்வாறு தேர்வு செய்யப்படும் நிறுவனம் நல்ல முறையில் நீர்ப்பணி நிலையத்தினை இயக்கி பராமரிக்கும் பட்சத்தில், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்திடவும், ஒப்பந்த தொகையிலிருந்து 10% உயர்த்தி வழங்கிடவும் அனுமதி அளிக்கலாம்.
5. மேற்கண்ட தொகையினை 2022-23ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) குடிநீர் வழங்கு பணிகள் - பராமரிப்பு செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1200.00ல் இருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

இ4/ 8714 / 2022 / மையம்

தீர்மானம் எண்: 138, அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்: 30

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5ற்குட்பட்ட பகுதிகளில் உள்ள /நடுநிலை/உயர்நிலை/ மேல் நிலைப்பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளில் துப்புரவு பணிகளை மேற்கொண்டு பராமரித்திட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் ஏற்கனவே துய்மை பணிக்களுக்கான பணியாளர்கள் குறைவாக இருப்பதால். அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்கள், ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு துய்மை பணியாளரை நியமிக்கப்பட்டு அவர்களுக்கு நாள் 1க்கு ரூ.295/- ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஊதியத்தினை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண். ஜே 3/7525/2018 நாள்.23.10.2018ல் துய்மை பணியாளர்களுக்கு 2018- 2019ம் ஆண்டிற்கு நாள் 1க்கு ரூ. 360/-என நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலி தொகையினை ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் தவிர்த்து, நிபந்தனைகளுக்குட்பட்டு அந்தந்த கோட்ட அலுவலகங்களில் ஒவ்வொரு மாதம் வழங்குவதற்கு, மாமன்றத் தீர்மானத்தில் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தலைமை ஆசிரியர்களால் பரிந்துரைக்கப்பட்ட துய்மை பணியாளர்களை 01.04.2019 முதல் 31.03.2020 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் கீழ்காணும் பள்ளிகளில் தூய்மைப் பணியாளர்கள் நியமனம் செய்து பணிபுரிந்து வந்தனர்.

மேலும் மிக கொடிய வைரஸ் கொரோனா தொற்று நோய் இந்தியா முழுவதும் பரவியதால் தமிழ்நாடு முழுவதும் அனைத்து பள்ளிகளும் அடைக்கப்பட்டது. தற்சமயம் தமிழ்நாடு அரசு பள்ளி கல்வி துறை வழிகாட்டுதலின் படி மீண்டும் பள்ளிகளை திறப்பதற்கு அனுமதி அளித்ததை தொடர்ந்து இக்கோட்டத்திற்குட்பட்ட பள்ளிகள் செயல்பட்டு வருவதால், தூய்மைப் பணியாளர்களும் தற்பொழுது பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், 01.12.2021 முதல் 31.05.2022 வரை ஊதிய வழங்கப்பட்டதற்கான பின்னேற்பு அனுமதியும், அதனைத் தொடர்ந்து, 01.06.2022 முதல் 31.03.2023 வரை கீழ்கண்ட பள்ளிகளில் 16 துய்மை பணியாளர்களை தொடர்ந்து பணியில் அமர்த்திக் கொள்ளவும் மற்றும் 16 தினக்கூலி தூய்மைப் பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.360/- வீதம் (360 X 304 X 16 = ரூ.17,51,040) மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிர்வாகப் பங்குத் தொகை 13 சதவீதம் ரூ.2,27,635/-ஐ ஆக கூடுதல் தொகை ரூ.19,78,675/-ஐ ஊதிய செலவினத்திற்கு அனுமதி வேண்டி மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

வ.எண்	வார்டு எண்	பள்ளியின் பெயர்
1	40	மாநகராட்சி நடுநிலைப்பள்ளி. எ. புதூர்.
2	40	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பிராட்டியூர் ராம்ஜி நகர்.
